**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத் துறை**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(13.09.2023 முதல் 17.09.2023)**

**அறிக்கைஎண் 073/2023** **தேதி.12.09.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 08.09.23 முதல் 11.09.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 33°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 22°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 64 சதவிகிதமாகவும் பதிவானது. சுராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 19-25 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (08.09.2023 முதல் 11.09.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 17.09.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **08/09** | **09/09** | **10/09** | **11/09** | **தேதி** | **நாள்-1 13/09** | **நாள்-2 14/09** | **நாள்-3 15/09** | **நாள்-4 16/09** | **நாள்-5 17/09** |
| 13.1 | 3.7 | 3.1 | 10.1 | **மழை (மி.மீ)** | 16 | 2 | 2 | 3 | 6 |
| 31 | 31 | 33 | 33 | **அதிக பட்ச வெப்பநிலை (°செ)** | 32 | 31 | 31 | 30 | 30 |
| 22 | 23 | 23 | 23 | **குறைந்த பட்ச வெப்பநிலை (°செ)** | 22 | 21 | 20 | 20 | 20 |
| 7 | 7 | 7 | 7 | **மேக மூட்டம் (ஆக்டர்)** | 7 | 7 | 7 | 8 | 8 |
| 82 | 75 | 85 | 82 | **அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%)** | 70 | 70 | 70 | 70 | 70 |
| 76 | 64 | 64 | 64 | **குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%)** | 30 | 30 | 40 | 40 | 40 |
| 25 | 23 | 22 | 19 | **காற்றின் வேகம் (கி.மீ/மணி)** | 18 | 16 | 18 | 20 | 20 |
| 230 | 200 | 200 | 230 | **காற்றுவீசும் திசை** | 250 | 250 | 250 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (13.09.2023 முதல் 17.09.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 16-20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரிய நாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பெட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **13-09-2023** | 5.0 | 8.0 | 10.0 | 9.0 | 11.0 | 12.0 | 6.0 | 6.0 | 11.0 | 7.0 | 9.0 | 11.0 |
| **14-09-2023** | 2.0 | 1.0 | 1.0 | 1.0 | 0.0 | 0.0 | 2.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **15-09-2023** | 2.0 | 1.0 | 2.0 | 1.0 | 0.0 | 1.0 | 1.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **16-09-2023** | 1.0 | 2.0 | 3.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 |
| **17-09-2023** | 3.0 | 5.0 | 6.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு மேற்கு மண்டல உட்பகுதிகளில் இலேசான மழை மற்றும் மேற்குதொடர்ச்சி மழையடிவாரங்களில் மிதமானது முதல் கனமழையும், 10-20 கி.மீ வரையிலும் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.<br>மழை பெய்தவுடன் வட கிழக்கு பருவகால தானியம், நிலக்கடலை நடவு செய்ய மானாவாரி நிலங்களை தயார் செய்து விதைப்பினை தொடங்கலாம். |
| நெல் | விதைப்பு | மழை எதிர்பார்க்கப்படுவதால் சம்பா பருவ மத்திய கால நெல் இரகங்களுக்கு மேட்டுப்பாத்தியின் மூலம் மத்திய கால நெல் நாற்றாங்கால் அமைக்கவும்.<br>சமீபத்தில் நாற்றாங்கால் விதைத்த இடங்களில் சாயங்கால நேரங்களில் 2.5 செமீ அளவிற்கு நீர் தேக்கி காலையில் வடிப்பதனால் மழைத்துளிகளினால் விதைகள் நகர்வதை தவிர்க்கலாம்.<br>பேசில்லஸ் சப்டிலிஸ் என்ற உயிரியியல் காரணியை 10 கிராம் கிலோ விதைக்கு விதை நேர்த்தி செய்யவும். குலை நோயின் அறிகுறி தென்படின் அசாக்ஸிஸ்ட்ரோபின் @ 1 மில்லி / லிட்டர் தண்ணீர் என்ற அளவில் தெளிக்கவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும்.<br>கரும்பில் நுனிகருகல் நோய் காணப்பட்டால், புரோபிகோனசோல் @ 1மிலி/லிட்டர் + இமிடாகுளோபிரிட் 17.5 SL @ 0.3மிலி/ லிட்டர் என்ற அளவில் தெளித்து பொக்கோ போயிங் நோய் வருவதை தடுக்கலாம். |

| | | |
|---|---|---|
| பருத்தி | பூக்கும் பருவம் | மழை எதிர்பார்க்கபடுவதால் மானாவாரி மற்றும் இறவையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்திக்கு தகுந்த வடிகால் வசதி ஏற்படுத்தவும். பருத்தியில் செடிகளில் அதிகமான தழை வளர்ச்சியை தடுத்து பூக்களை அதிகப்படுத்த 15 வது இடைக்கணுவுக்கு மேல்உள்ள பகுதியை கிள்ளி விடவும். மேலும் பூ உதிர்வதை தவிர்க்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 மிலி கிராமை 1 லி தண்ணீரில் கரைத்து நடவு செய்த 60 முதல் 90 வது நாளில் தெளிக்கவும்.<br>பருத்தியில் இலைக்கருகல் நோயின் அறிகுறி தென்படின், மேன்கோசெப் 2 கிராம் / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 16 - 20 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும்.<br>வாழையில் சிகாடோகா இலைப்புள்ளி நோயை மேலாண்மை செய்ய புரபிகோனசோல் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி மருந்துடன் ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும். |
| மஞ்சள் | | காற்றின் ஈரப்பதம் மற்றும் வேகம் அதிகமாக உள்ளதால் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் பரவ வாய்ப்புள்ளது. இதைக்கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு 1 கிலோ மேங்கோசெப் மருந்தினை தெளிக்கவும்.<br>மஞ்சளில் கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடி உயிரியியல் காரணியை ஒரு ஹெக்டருக்கு 2.5 கிலோ டிரைக்கோடெர்மாவை 250 கிலோ எருவுடன் நன்கு கலந்து வேர்பகுதியில் இடவும். |
| கால்நடை | | கொசுக்களை தடுக்க கால் நடை கொட்டகைகளில் தண்ணீர் தேங்காமல் பாதுகாக்கவும். |

## குறுஞ்செய்தி

- மழை பெய்தவுடன் வட கிழக்கு பருவகால தானியம், நிலக்கடலை நடவு செய்ய மானாவாரி நிலங்களை தயார் செய்து விதைப்பினை தொடங்கலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**